உ

சிவமயம்.

கதிரேசன்பேரில்

ஆனந்தக்களிப்பு

கதிர்காமத்துஊசல்

கதிர்காமக்கும்மி

மங்களம்.

இந்நான்கும் அடங்கியிருக்கின்றது.

இஃது

மதுரைச்சில்லா இராமநாதபுரம் சீர்மைசேகரம்

திருப்புல்லாணியிலிருக்கும்

தங்கம்முத்துராமலிங்கம்பிள்ளையவர்கள்

குமாரராகிய

இராமசாமியாபிள்ளையவர்கள்

இயற்றியதை.

சென்னை - இட்டா

பார்த்தசாரதிநாயுடு அவர்களது

திருத்தமான பதிப்பு.

பதிப்பிக்கப்பட்டது.

MADRAS

1896.

சதுர்முகன்தேவிநயந்தரவே-யிந்தத்
தாரணியிலுகந்தகவிவாணர்ஜெயம்பெறவே ௫

கதிர்காமமானகர்சிறப்பாம்-எங்கள்
கண்ணனருளால்சொன்னஆனந்தக்களிப்பாம் ௬

திசைமெய்த்தபுகழ்கொண்டுநாளும்-நல்ல
செல்வமிகுயாபாரதர்மமதுவாழும் ௭

வசியகுலநகரத்தார்தானே-வந்து
வணங்குமெங்கள்கதிரேசன்சன்னதியில்நானே ௮

சொன்னகவிதன்னையரங்கேற்ற-வதனில்
சொற்பிழைகள்வாராமலென்னையுமேகாத்த ௯

நன்னயமிகுந்ததெய்வானை-யம்மன்
நற்கமலரடியிணையைநான்றுதிப்பேனே ௰

அருமறைகள்புகழ்துதிகள்பூணும்-வள்ளி
யம்மையென்கவிதனக்கருள்தரவும்வேணும் ௰௧

குருமுனியைப்பணிந்துகவிகூற-அதற்கு
குறைகளொன்றும்வாராமல்சபையிலாங்கேற ௰௨

சீதையால்ராமனுமுன்னாலே-வந்து
தெர்ப்பசயனஞ்செய்ததிருப்புல்லாணியிலே ௰௩

நாதனருள்கங்கைகுலசீலன்-தங்கம்
ராமசாமிசொன்னகவிக்குகந்தவேலன் ௰௪

எச்சரிக்கையென்றிடும்பன்கூற-வந்து
இருபுறமுங்காவடிகள்நின்றுவிளையாட ௰௫

பச்சைமயிலேறியருள்சீலன்-நித்தியம்
பக்ஷம்வைத்தென்கலியகற்றும்வடிவேலன் ௰௬

தென்கதிரைமாநகர்விளங்க-வந்த
தேவாதிதேவர்ஜெயங்கூறியேமுழங்க ௰௭

அன்பானசன்னதியிலங்க-கதிரை
ஆறுமுகவேலருடமாபதிதுலங்க ௰௮

முன்னாலேகோபுரமுகப்பும்-எங்கள்
முருகேசன்கோவில்முழுச்செம்பால்வகுப்பும் ௰௯

கதிரேசன்பேரில் ஆனந்தக்களிப்பு.

அன்னமெனும்தெய்வானைமாடம்-வள்ளியம்மை
யவள்பந்தடித்துவிளையாடிடுங்கூடம் ௨௰

மூதண்டயோகபதியேறும்-கதிரை
முத்துலிங்கசுவாமியுடசன்னதியைப்பாரும் ௨௧

நாதமொடுகீதமுமுழங்கவசிய
நகரத்தார்நட்டிவைத்தசத்திரம்விளங்க ௨௨

காணிக்கைகொண்டுவெகுகோடி-ஜனங்கள்
கதிரேசன்சன்னதிக்கிவருவார்கள்தேடி ௨௩

மாணிக்ககெங்கைநீராட-இங்கே
மாதவரும்மனிதர்களும்வந்தேநிதங்கூட ௨௪

பொன்னலங்காரநகர்வாசம்-எங்கும்
புகழ்பெற்றநவரத்னமேவிளையுந்தேசம் ௨௫

சொர்னமிகுகதிரைவளமெத்த-தோழி
சொல்லுகிறேன்நாட்டுவளம்வானுலகுதித்த ௨௬

இந்திரனுடயேவலதினாலே-வந்த
ஏழுமேகமுமொன்றுகூடியேமேலே ௨௭

சந்திரனெனவாகவுமேவோங்கி-சத்த
சாகரமதில்த்தாவிதண்ணீரைவாங்கி ௨௮

மாலெனவிசும்புடைபடர்ந்து-முகில்கள்
மண்டியேகெற்சித்துமின்னலுமடர்ந்து ௨௯

நாலுதிசைநாடியேதெளிந்து-கதிரை
நகர்பூமியெங்குமழைமாரிகள்பொழிந்து ௩௰

ஏரிகுளம்வாவிகள்நிறைந்து-வயல்க
ளெங்கெங்குமேகன்னலும்வளர்ந்து ௩௧

வீரியமிகுந்தமுதத்தின்-நல்ல
வெண்கமுகுசோலைமலைமேலெங்குந்தோண ௩௨

தனியேயழுத்துதிருமாவும்-அன்னில்
தாவியொருகொம்போடெகொக்குகளுமேவும் ௩௩

இனியமலர்வாசனைகள்தேடும்-விறென்
றிருபத்துநாலுகால்வண்டினங்கூடும் ௩௫

நாகமதுநாகமதிலேறும் துய்ய
நாகமேபுனைந்தசிலமாதரையும்பாரும் ௩௫

நாகமலர்சோருமலர்முல்லை-யிந்த
நாட்டினிலேகலைபகடுக்கொருகொம்புமில்லை ௩௬

முல்லையிருவாட்சிகளெடுத்து-அந்த
முல்லையிலேயில்லில்லாமடவார்தொடுத்து ௩௭

வல்லவினைதீரவெனத்தேடி-மாது
வள்ளிதெய்வானைக்கிடுவார்கள்கோடி ௩௮

சதுர்மறையும்புகழ்தேவரிங்கே-வந்து
தான்வாசஞ்செய்கதிரைமாணிக்ககெங்கை ௩௯

இதிமேனீராடுவதுசித்தி-ஜென்மம்
ஈடேறுஞ்சாயுச்சியபதவியிலேமுத்தி ௪௰

கோலமாமலையழகைப்பாரும்-கதிரை
குமரேசனருளாலேவல்வினைகள்தீரும் ௪௧

மூலகணபதிக்கிளையவான்-கதிரை
முத்துபுங்கேசருக்கருள்செய்தயோகன் ௩௨

மாமேவும்புலிபுகழுந்தேட்டான்-கதிரை
மகிமைகளைச்சேடனலளவிடமாட்டான் ௪௩

பூமேவுங்குழல்வள்ளிநேயன்-சுவாமி
புண்ணியன்தேவருக்கும்மனிதருக்குந்நாயன் ௪௪

பச்சைமால்தனக்குமருகோனே-சுவாமி
பழனிமலைமீதினிலேமேவுமுருகோனே ௪௫

வச்சிராயுதன்தம்பிமருகா-உந்தன்
மலரடியெனக்குநிதந்தரவேணுமுருகா ௪௬

நவவீரர்துணையானகுகனே-நம்பி
நாராயணன்றங்கையபிராமிமகனே ௪௭

நவமணியணிந்தவொளிமூவா-நின்று
நடனமிடுமயிலேறியெனைவந்துகாவா ௪௮

கனககுண்டலமிட்டநீதா-சுவாமி
கார்த்திகேயாலட்சம்படைவீரர்நாதா ௪௯

தனமேருபாக்கியமருள்வேலா-எங்கும்
சர்வபரிபூரணானந்தசிவபாலா ௫௰

ஓராறுமங்கையர்கள்சேயன்-பவனி
ஒய்யாரமாகமயில்மீதுலவுதூயன் ௫௧

ஈராறுபன்னிருகையாண்டி-புவன
மெங்கெங்குமேதுதிமிகுந்தமெய்யாண்டி ௫௨

ஆண்டிபொன்னாண்டிசிவனாண்டி-பழனி
யாண்டிமலையாண்டிசிலையாண்டியிவனாண்டி ௫௩

ஆண்டிமகனாண்டிபிவனாண்டி-நதிகள்
அழகானசாமிமலைதிருப்பரங்குன்றாண்டி ௫௪

சிக்கல்புரவச்சேரியாண்டிசுவாமி
திருச்செந்தூரெட்டிகுடிகுன்றைக்குடியாண்டி ௫௫

மிக்கதிருவேரகத்தாண்டி-கதிரை
மேவிவளர்வேல்முருகனாறுமுகத்தாண்டி ௫௬

சோலைமலைகழுகுமலையாண்டி-நல்ல
தோகைமலைவிராலிமலைசென்னிமலையாண்டி ௫௭

காலையருள்பெற்றவடிவேலா-முனிவர்
மாதவர்க்கேயெந்தநாளுமனுகூலா ௫௮

விடவரவுபடமும்விசைகெடவும்-படியே
வடவரைகள்கிடுகிடெனகெஜமுமசைபடவும் ௫௯

கடல்சுவரகதிர்மதிகலங்க-தாவி
கனவேகமாகவருமயில்மீதிசிங்க ௬௰

மேலாகிவிளையாடுமெய்யா-வெற்றி
காலாயுதத்தையுமெடுத்தமுருகையா ௬௧

சாலோகசாமீபமென்னும்-சுவாமி
சாரூபசாயுச்சியபதவியிலேமுன்னும் ௬௨

ஆகவேலன்றபரநாதாளன்னை
ஆதரித்தாளவரவேணுங்குருநாதா ௬௩

தாகமாயிருக்குதுனைக்காணகந்த
சுவாமிவருவாயெனதுகண்ணெதிரேதோண ௬௪

அரகராவேலனேநமாவோம்-சுவாமி
ஆறுமுகமாய்வந்தவடிவேநமாவோம் ௬௫

அரகராமுருகாநமாவோம்வாலை
யம்பிகைபராசத்திமைந்தாநமாவோம் ௬௬

அரகராகுகனேநமாவோம்-சுவாமி
அன்பருக்கன்பானபொருளேநமாவோம் ௬௭

அரகராதேவாநமாவோம்-சுவாமி
அகிலபுவனத்திலும்நிறைந்தாய்நமாவோம் ௬௮

மயிலேறுமொயிலாநமாவோம்-பொதிகை
மலைமேவுந்தமிழ்முனிவன்குருவேநமாவோம் ௬௯

மயிலேறும்மந்தாநமாவோம்-வட்ட
வடவாலில்மேவுமால்மருகாநமாவோம் ௭௰

மயிலேறும்நாதாநமாவோம்
மலைமேவும்பரமனுடகுருவேநமாவோம் ௭௧

மயிலேறுகின்றாய்நமாவோம்-தங்க
வடிவானவேலதுவுகந்தாய்நமாவோம் ௭௨

திருபுரபவாவாநவாவோம்-வாலை
சேயனேதிகழொளிபவாவாநமாவோம் ௭௩

பரிபுரபவாவாநமாவோம்-வள்ளி
பாகனேபவவொழிபவாவாநமாவோம் ௭௪

சாஹணபவாவாநமாவோம்-கந்த
சுவாமியேசயலொழிபவாவாநமாவோம் ௭௫

தரும துணையேநீருமென்னை-நல்ல
தருணமிது காணிந்த வேளையிலேயென்னை ௭௬

காவாவுன்னீரடிகள்தன்னை-நான்
கணடெனதுகலிதீர வந்துமென்முன்னை ௭௭

வாவென்று சொல்லமனமில்லையோ-உமக்கு
வள்ளி தெய்வானைவிடைதந்தனுப்பவில்லையோ ௭௮

கஞ்சமென்றேனே யுனக்கு-எனது
சஞ்சலமெனுங்கலியைத்தீர்ப்பாயெனக்கு. ௭௯

அஞ்சறிவுமானதா யகனே-சுவாமி
அகிலண்ட கோடிபிர்ம்மாண்டநாயகனே. ௮௰

உன்கிருபை தந்துமேகண் பாரும்-இந்த
உலகமுழு தாள்பவனே யென்கலியைத்தீரும் ௮௧

அன்புபெரும் வரைராஜனபேரா-சுவாமி
அடியனுன் னடியிணையைக் காணநீராரா. ௮௨

வாவாயென் றேவாநீயென்றே-சுவாமி
வடிவேலாவாவெனத்தொழுதுநின்றே ௮௩

எவன்றேடினாலுந்தேடட்டும்-நமக்
கென்சொல்லிக் கவிபாடினாலும்பாடட்டும் ௮௪

நமக்கென்ன வென்றிருக்கிறீரோ-சுவாமி
ஞாயமோநானுமுறையிட்ட தறியீரோ. ௮௫

உமக்குமனமிரங்காததேது-எங்க
ளுத்தமி துரந்தரியின் பாலாயிப்போது. ௮௬

ஐயாநீகிருபைசெய்த தாலே-இந்த
அகிலாண்டகோடிபூமண்டலத்தின்மேலே ௮௭

மெய்யானசரிதையி லனேகர்-அதற்கு
மேலான கிரிகையி லிருப்பவரனேகர் ௮௮

தவயோகக்காரர்வெகுவெள்ளம்-ஞானந்
தங்கியே யிருப்பவர்க ளொமகாவெள்ளம் ௮௯

அவர்களைப்போல் தான்பிறந்ததில்லையோ-சுவாமிக்
காளாகவெனக்குவிதி வயனெழுதவில்லையோ ௯௰

அன்னையவ ளீன்றெடுத்தகெதியோ-யெனக்கு
ஆதியிலேமுன்னவர்கள்செய்துவந்தசதியோ. ௩௧

என்னகுறை யிருந்தாலுந்தீர்த்து-உந்தன்
இணையடிக்கி யாளாகவென்னையுமேசேர்த்து. ௩௨

ஆளாக்கியாள லாகாதோ-எந்த
னகந்தனிலே நீயிருந்துவாழலாகாதோ ௩௩

பாழான மனங்குவியுதில்லையோ-யென்ன
பாவமோ வதிலிருக்கும்பிசகுதெரியல்லையே. ௩௪

வஞ்சகமில்லாமலே கண்பாரும்-முடிவில்
மறலியுடதூதரென்னை வருத்தாமல்க்காரும். ௩௫

அஞ்சதலை யாரருளுந்துரையே-உமக்கு
அஞ்சுதலையால்வேத னிருந்ததுவுஞ்சிறியே. ௩௬

ஆறுதலை கண்டண்டரய்யா-பின்பு
ஆறுதலையாப்பதியையாண்டாரேமெய்யா ௩௭

ஆறுபடைவீட்டுக்கதிகாரா-வந்த
அசுரருடனஞ்சாத போர்புரியும்வீரா ௩௮

நத்தியுமைபாலகணேசாமி-உந்தன்
தாசனுக்குத்தாசனெனைக்காப்பதற்க்கேமி ௩௯

சுத்தபரிபூரணவுன்னை-ஒதி
துதிக்குமடி யார்க்கடிமையாகவருளென்னை ௪௰

பொய்யாத வாழ்வருளவேலா-கதிரை
ஐயாவே யென்னையாளுந்தேவாதிதேவா. ௪௧

ஒய்யாரமானமுருகோனே-வந்த
உற்பவமெனுந்துதியை செப்புவேனுனே. ௪௨

உரமானவசுரரிடராலே-தேவ
ரோடிமுறயிட்டாரோகைலைமலைமேலே, ௪௩

அரனசுரர் மேலக்கோபமாகி-கைலை
யாளிவிழி தனிலே யொருபொறிசிதறியேகி ௪௪

சரஹணப்பொய்கையிலமர்ந்து-அதுவுஞ்
சந்திரோதயம்போலேபாலனெனவந்து. ௱௫

உருவாகிமலர்மீதிலானார்-எங்கள்
ஓம்நமசிவாயரெனும்பரமனருள்மகனார் ௱௬

அப்பவேசென்னியோராறும்-மெத்த
வழகானசெந்திருபுயங்களீராறும் ௱௭

உற்பவமானபனிரண்டு-விழிகள்
ஒளிவாகிவோராறுபெண்கள்பாலுண்டு ௱௮

அயனையுஞ்சிறையினில் விடுத்தான்-கந்த
னரனுக்குவுபதேசஞ்சொலலியேகொடுத்தான் ௱௯

கயமுகாசூரன்முதலோரை-கந்தன்
கைவேலினாலவர்கள்கருவறுத்தாரே ௱௰

தங்கவடிவேலலங்காரன்-மாது
தையல்தெய்வானைமணமேவுசிங்காரன் ௱௰௧

தென்கதிரை மானகரிலங்கும்-சுவாமி
சிங்காரமாயுனதுவருள்கிருபைபொங்கும் ௱௰௨

சித்தமுமகிழ்ந்துவரும் லோலன்வள்ளி
தெய்வானைக்கிணையானசித்ரமயில்வேலன் ௱௰௩

சத்திவேலாயுதமுமுடையா-பூண்ட
தண்டைகள்களீரெணவேவத்தருளும்நடையாச ௱௰௪

கடகமெனுமானதிங்களிலே-எங்கள்
கதிரேசன்திருவிழாபவனிவருகையிலே ௱௰௫

கடல்போலே பேரிகைமுழங்க-விருது
கட்டியமிருபுறமுமருகேதயங்க ௱௰௬

செங்காவிப்பட்டாலேகோடி-கொடிகள்
ஜென்டாவுமாலவட்டக்குடைகள்பலகோடி ௱௰௭

மங்காதசாமரைகள்கோடி-விசி
வருவார்கள்நடனமிடுமடமாதர்கோடி ௱௰௮

இங்கேவந்துநானிருப்பதாலே-யென்னை
யெங்கையோவென்றுதெய்வானையொருக்காலே. ௱௪௭

மங்கையருந்தேடுவாளின்று-யெனக்கு
வள்ளிநீவிடைதாடிபோய்வாறேனென்று ௱௪௮

இவர்கூறவள்ளிமின்னாளே-சுவாமி
யின்றிரவுயிங்கிருந்துபோகலாம்நாளை ௱௪௯

அவசரமுமக்கென்னயங்கே-சுவாமி
ஆனாலும்நீர்போகசம்மதியேநிங்கே ௱௫௰

கூடாதுஉம்மைவிடமாட்டேன்-மூத்த
குடியாளுகஞ்சிநான்பயப்படவுமாட்டேன் ௱௫௧

தேடியிங்கேதெய்வானைவரட்டும்-யென்றும்
செப்புவதுயொப்பினையும்வள்ளிகைநீட்டும் ௱௫௨

பார்த்தேதடிவள்ளிமானே-சற்றும்
பாராமலிம்மொழிகளேன்சொல்லுவானே ௱௫௩

ஆத்திரமுனக்கென்னபோடி-தெய்வ
யானைக்கிநிகராவரோபெண்கள்கோடி ௱௫௪

சொந்தமாய்கிருபைபாராட்டி-அந்த
தோகயரைப்பருவமதில்நானமலைகூட்டி ௱௫௫

வந்தபடியாலவளுனக்கு-முந்தி
வந்தவளுமானதால்நானுமவளுக்கு ௱௫௬

அடக்கமாயிருப்பதுவேசிலாக்கியம்-வள்ளி
ஆனாலுமில்லறத்துக்கதுதானேயோக்கியம் ௱௫௭

மடற்கொடிதெய்வானையவளிங்கே-நானும்
வந்தவகைதெரியாதுதேடுவாளங்கே ௱௫௮

போகவிடைதாவெனவதட்ட-யெங்கள்
பூவையெனுங்குறைமாதுக்கதிகோபமுட்ட ௱௫௯

மாகனகமேடையிலிலங்கும்-உமது
மனையாட்டிமுத்தகுடியாளெனவிளங்கும் ௱௬௰

தெய்வானைசொந்தமாய்போச்சே-நானுந்
திருட்டுத்தனமாய்வந்தகள்ளிபோலாச்சே ௱௬௧

கைமாயஞ்செய்தோமேநாங்கள்-ஒருவர்
காணாதேமாலையிட்டுவந்திரோவுங்கள் ௱௬௨

சாகியாரேசுவாரோகாண்-நீருந்
தலைமறையபென்மணைக்கிவருவானேயேன்காண் ௱௬௩

ஆதியிலேயென்னைநினைத்து-வந்து
தறியாளோதெய்வானையும்மையுமழைத்து ௱௬௪

கூட்டிவந்தநாரதரைக்கேளும்-வனத்தில்
குளத்தருகிலேயிருந்தகரடிபுலிவாழும் ௱௬௫

காட்டினிலுமக்குதவிசெய்தார்-வுங்களண்ணன்
கணபதியைக்கேட்டாலுஞ்சத்தியமாய்ச்சொல்வார் ௱௬௬

சிவதவங்கள்செய்சபைமுன்னாலே-வைத்து
தெய்வானையைத்தாலிகட்டினதினாலே ௱௬௭

அவள்மாத்திரஞ்சொந்தக்கிளியோ-சுவாமி
ஆனாலும்நான்கிழக்குமுகமிருக்கவில்லையோ ௱௬௮

வள்ளியிவைசொல்லவேதிகைத்து-சென்னல்
வளமானதென்கதிரைவேலனும்நகைத்து ௱௬௯

கள்ளிபோல்வீணிலிரையாதே-பொல்லாக்
கசடானகுறவருடசாதியொளியாதே ௱௭௰

ரெண்டுசெமுசாரமாகாது-யென்று
நீணிலத்திச்சொல்லுவதுசரியானதோது ௱௭௧

வண்டர்குலமானேயுலாநாடி-வந்த
மணவாளனுக்கெதிர்கள்பேசலாமோடி ௱௭௨

நில்லுநான்போய்வாரேனென்று-சொன்ன
நின்வறிந்துவள்ளியவள்-சீறியெதிர்நின் ௱௭௩

வல்லபமுமக்கென்னகாணும்-எனக்கு
வகைசொல்லியபபாலேநீர்போகவேணும் ௱௭௪

என்சமர்த்தைப்பாருமினியென்றே-வள்ளி
　　இடைதனிலேசேலையையிறுக்கியெதிர்கொண்டே ௱௭௫
அன்புறநெருங்குவதுகண்டார்-வள்ளி
　　அப்பாலேநில்லென்றுசொல்லுகிறேனென்றார் ௱௭௬
சொல்லுகிறசமாச்சாரமென்ன-உமது
　　தொழிலைநான்னெடுகிலுமறிந்துமினியென்ன ௱௭௭
நல்லதினிமேற்கொண்டுபார்ப்போம்-உமது
　　ஞாயமதைதேவசபையிலேசொல்லிக்கேழ்ப்போம் ௱௭௮
தேவசபையிலேசொல்லிப்பாரு-அவற்கு
　　தெரியுமடிதிணைப்புனத்தில்நீயிருந்தசீரு ௱௭௯
ஒவியமேஉன்னுறுதிகேட்க-யெழுதும்
　　உடன்படிக்கைமுறியுண்டோகொண்டாடிப்பார்க்க ௱௮௰
உடன்படிக்கைமுறியெழுதித்தாறேன்-வள்ளி
　　யுனக்கேவல்செய்வதற்குஉன்பிறகேவாறேன் ௱௮௧
கடக்கவெனைத்தள்ளாதேமானே-யென்று
　　கட்டிமுத்தமிட்டதுகசப்பேறுவானே ௱௮௨
தனியேயவனத்திலிருபேருங்-கூடுஞ்
　　சையோகவேளையிலேபார்த்தென்னைநீரும் ௱௮௩
இனியசெந்தேனோகற்கண்டோ-உந்த
　　னிதமென்றுசொன்னதுவுமில்லையோவுண்டோ ௱௮௪
முன்னிருந்தயினிப்பென்னபோச்சோ-யிப்போ
　　மூத்தகுடியாளுமக்குசர்க்கறைபோலாச்சோ ௱௮௫
என்னைநீர்வசைசொல்வதேனோ-சுவாமி
　　யெங்குலத்தைநீரிகழ்ந்துபேசுவதுமேனோ ௱௮௬
தந்தையுங்கள்தேட்டையெடுத்தாரே-யெங்கள்
　　சாதியார்வந்துநிதந்தின்றுகெடுத்தாரோ ௱௮௭

கதிரேசன்பேரில் ஆனந்தக்களிப்பு.

எந்தனுற்குறைகளே துண்டோ-சுவாமி
இழுக்கெந்தசாதியிலுமில்லாமலுண்டோ ௱௮௮

மங்களகல்யாணமதில்நல்லா-அந்த
மணவறையிலென்தகப்பனிட்டநகையல்லால் ௱௮௯

உங்களிடம்வந்தநாட்கொண்டோ-யெனக்கு
ருத்திராட்சவடத்துக்கொருகடமணியுமுண்டோ ௱௯௰

மாதிவையுரைக்கமுத்தையன்-வள்ளி
மங்கைதனைப்பார்த்தேதுசொல்வார்மெய்யன் ௱௯௧

ஏதடிநீபேச்சதிகங்கொண்டாய்-வள்ளி
யென்னுடையசாதியிலிழுக்கென்னகண்டாய் ௱௯௨

குபேரன்மகள்போலபேசாதே-யொப்பன்
கொடுத்துவிட்டவரிசைகளைவெளியேசொல்லாதே ௱௯௩

சபையார்களென்னவறியாரோ-யிந்த
தாரணியிலுள்ளவர்களெவருமறியாரோ ௱௯௪

உடுத்திவந்ததுணிக்கிவேறுண்டோ-களிம்பு
ஊறியபித்தாளையோலைக்கிவேறுண்டோ ௱௯௫

தொடுத்திருந்தகருகமணியோடே-யென்னை
துடர்ந்துவரும்போதுனக்கேதுபட்டாடே ௱௯௬

வண்ணார்கள்வெளுக்காதகலையுஞ்-சுத்த
வாணியர்கள்யெண்ணையிட்டறியாததலையும் ௱௯௭

புண்ணுக்குபோலழுக்குமேலுங்-காட்டில்
புரண்டிசெடிமுள்ளிழுத்துசுரண்டிவிட்டகாலும் ௱௯௮

எப்போதுங்காய்கிழங்கைதின்று-நீயும்
இருந்தகெதிதெரியாதோவரும்போதென்பின்னும் ௱௯௯

அப்பவேநானழைத்துவந்து-நல்ல
வாபரணமானதையுமழகாயணிந்து ௨௱

செம்பவழமாளிகையமைத்து-உனக்கு
செங்கமலத்தாதிகளையேவல்நேமித்து ௨௱௧

நம்பிநான்செய்ததைமறந்து-வள்ளி
நாயகமேபேசுவதுமென்னடியிகழ்ந்து ௨௱௨

மாதேநீபதறுதேவாடி-யெந்தன்
மனமுழுதுமறியாமல்சொல்லாதேபோடி ௨௱௩

கோதையேயிதுவென்னமூர்க்கம்-உங்கள்
கூறறிந்துசொல்லுகிறேன்குறவருடமார்க்கம் ௨௱௪

சாராயங்கள்ளுகள்குடித்து-குறவர்
சந்திக்கிசந்தியேசண்டைகள்பிடித்து ௨௱௫

பூராயந்தெரியாமற்கத்தி·கண்ட
பூனைகளையெரவாரமுசலென்றுகுத்தி ௨௱௬

தின்பதுவுமுண்டதிகமாக குறவர்
சேரியிலேநீபழகிவந்ததைபோக ௨௱௭

செம்பவளவாயாளேயென்று-சுவாமி
செப்பவெவள்ளியவள்வெஞ்சினங்கொண்டு ௨௱௮

விண்ணுணம்பேசுவதுசிரோ-தலை
மீதிலெலும்பானதுவைதின்றதுவுமாரோ ௨௱௯

கண்ணப்பனெச்சிதிங்கலையோ-சிவனுங்
கரிக்காகப்பாலகனைக்கொன்றதுவுமிலையோ ௨௱௰

புத்தியுமக்கில்லாதேபோமோ-கெட்ட
புனக்குறவர்பெண்ணைநீர்சம்மதிக்கலாமோ ௨௱௰௧

யெத்திசையுபுகழ்பெற்றநாதா-வென்று
யிவள்சொல்லும்வசைகண்டுகூறுவார்தோதா ௨௱௰௨

அடந்தேருவார்குடியிருந்தால்-குரவர்
அவர்தனக்கேசிலவுக்கில்லாதிருந்தால் ௨௱௰௩

கடன்வாங்குவார்சம்மதித்து-தாலி
கட்டியபெண்டுகளையீடாகவைத்து ௨௱௰௪

குடித்துவிட்டபணத்துக்கீடாக-வைத்த
குறத்திகளைப்பணங்கொடுத்தகுறவன்வெகுவாக ௨௱௰௫

அடித்தவனையனுதினமுங்கூடி-யிவர்கள்
அஞ்சாறுபிள்ளைகளைப்பெற்றபின்தேடி. ௨௱௰௬

பணங்கொடுத்துதிருப்புகிறபோது-பெற்ற
பாலனையுங்கூட்டவேகூட்டியவள்மாது ௨௱௰௭

குணமாகமுன்னீடுவைத்த-பழைய
குறவனுடன்போவதுங்கள்சாதியிலேமெத்த ௨௱௰௮

இதுபுதுமையிவ்வுலகிலுண்டோ-வள்ளி
யேந்திழையேயிதைவிடலெச்சைவேறுண்டோ. ௨௱௰௯

கதிகொண்டமயில்வாகனத்தார்-இந்தக்
கதைசொல்லவேவள்ளியவளெதிருரைத்தாள். ௨௱௨௰

குறத்தியென்றுயெனக்குவசைபுரியுஞ்-சுவாமி
கும்பமுனியாலுங்கள்சேதிகொஞ்சந்தெரியுந் ௨௨௧

மறந்தீரோநீரறிந்ததில்லையோ-நொப்பன்
மலைவேடன்மகளைப்போய்மாலையிட்டதில்லையோ ௨௨௨

சிந்தைமகிழ்ந்தொருபெண்ணைத்தூக்கி-உங்கள்
சிவன்தலையில்வைத்துமேசுமந்ததுக்குச்சாட்சி ௨௨௩

நந்திகேசுபரர்சொல்லக்கேட்டேன்-சுவாமி
ஞாயனிசமில்லாமல்நான்சொல்லமாட்டேன் ௨௨௪

ஆட்டுக்காலதுதனையெடுத்தார்-உங்க
ளப்பனென்றவனிமுழுதெங்கும்பழித்தார். ௨௨௫

கேட்டுப்பாருமதுதாய்ஐயோ-ஒற்றை
மாட்டுக்காறனைவைத்திருந்ததும்பொய்யோ. ௨௨௬

கண்ணுயிறங்கொண்டநேத்தி-நொம்மான்
பெண்ணாசைகொண்டல்லோவந்தவபகீர்த்தி ௨௨௭

பெண்ணொருவர்கொடுக்காததினால்-நொண்ணன்
பெருவயறுகொண்டுவழுக்கனாயிருந்ததினால் ௨௨௮

அண்ணனுமேமதத்தளங்கொட்ட-சொந்த
வருணைமருமகனின்றுகைத்தாளந்தட்ட ௨௨௯

விண்ணவர்கள்கூடியேநகைக்க-வந்த
வேதியரும்மாதவருங்கண்டுபிரமிக்க ௨௱௰

தேவடியாள்போலுமதுவன்னே-கூடுந்
தேவசபையிலேனின்றுஆடலையோமுன்னே ௨௱௧

பாவலருக்கருள்புரியுஞ்சீலா-யிதையும்
பார்த்தவர்கள்சிரியாரோதங்கவடிவேலா ௨௱௨

பத்மாசூரனுக்குமிகப்பயந்து-உங்கள்
பரமசிவனோடலையோகாட்டுவழிநுழைந்து ௨௱௪

கைப்பொருளுமில்லாமல்தேசி-யென்று
கைப்பிச்சைவாங்கலையோபரமசிவயோகி ௨௱௪

கும்பமுனிக்கருள்புரிந்தோரே-யென்று
கூவியேவள்ளிசொல்லுமொழிகளறிந்தாரே ௨௱௫

தென்பானயென்மோகவள்ளி-யிந்த
சீமையிலேதிருடிவருங்குறவர்குலக்கள்ளி ௨௱௬

குதிகொண்டவனகுறவச்சாதி-வகையை
கூறறிந்துசொல்லுகிறேன்கேளுமவர்சேதி ௨௱௭

சதிர்பெருகுந்திருவிழாக்கடையில்-ஜனங்கள்
சந்தடிகளாகவேசயனிக்குமிடையில் ௨௱௮

கூசாமல்கூடிடவேபடுத்து-தூக்கம்
குலையாமல்பணிதிகளைக்கழற்றியேயெடுத்து ௨௱௯

பேசாமலோடுவதுகண்டு-குறத்தி
பெரியதனக்காரர்களுமேபிடித்துக்கொண்டு ௨௪௰

வம்பிலேதலைமயிரைக்கட்டி-குறத்தி
மார்பிலேபோடுவார்சொல்லென்றுகிட்டி ௨௪௧

செம்பாணிகொண்டுமேயிருத்தி-அவர்கள்
சேலையையுரிந்தம்மணமாகவேநிறுத்தி ௨௪௨

அடிதண்டமாகவேயடிப்பார்-குறவர்
அப்பவுமெடுக்கவில்லையென்றுமேதுடிப்பார் ௨௪௩

திடியடிக்கியசையாதசாதி-குறவர்
சங்கைகெட்டுநிர்ப்பார்கள்தெரியுமவர்சேதி ௨௪௪

என்றிவருரைக்கவுமேமாது-சுவாமிக்
கெதிராகநின்றேதுசொல்வாளப்போது ௨௪௫

தொண்டர்தொழுகின்றமயிலேறுஞ்-சுவாமி
சொல்லுவேனுங்கள்குலவளமைகளைப்பாரும் ௨௪௬

அடையாளஞ்சொல்லுகிறேன்கேளும்-நல்ல
ஆவினங்கள்கூடிவருமாய்ப்பாடிவாழும் ௨௪௭

இடையருடவளவிலென்னாளும்-உறியி
லிருந்தவெண்ணைதிருடினதையாரொன்றுகேளும் ௨௪௮

அன்றுடனசோதையறிந்து-வந்து
ஆவினங்கள்கட்டுறகயறுல்வரிந்து ௨௪௯

ஒன்றாகமாதரொருபக்கங்-கூடி
உரலோடேகட்டினதைச்சொன்னாலும்வெட்கம் ௨௫௰

கட்டுண்டதும்ரோசமில்லையோ-பெண்கள்
கட்டியசேலைகளைக்களவாண்டதில்லையோ ௨௫௧

வெட்டியசமர்க்களத்திலேரும்-கிருஷ்ணன்
விஜையனுடகுதிரைகளைமேய்க்கலையோபாரும் ௨௫௨

ஊத்துகிறகஞ்சிகளையேத்தார்-கிருஷ்ணன்
ஊர்க்காலிமாட்டையெல்லாங்கூட்டியங்கேமேய்த்தார ௨௫௩

கூத்ததிகமுண்டின்னம்ரொம்ப-சொல்லக்
கூசுதேயென்மனமுமென்றிவளியம்ப ௨௫௪

கேட்டவடிவேலவர்கைநீட்டி-வள்ளி
கேளடியுங்களுடவீடுமலைநாட்டில் ௨௫௫

நீட்டியிருகால்களைநிறாத்தி-அதனில்
நெடுமுட்டாகவளைகூட்டியேபொருத்தி ௨௫௬

நத்தியகயற்றுல்வரிச்சு-மழைக்கு
நனையாமல்மூங்கிலிலையால்மேய்ந்தகுச்சு ௨௫௭

சுத்திவைத்தசுவரெல்லாமோட்டை-யசந்து
தூங்கவும்விடாதங்கேமுணுமுணுத்தமூட்டை ௨௫௮

ஆடேரிமேயுமதில்தொல்லை-வீட்டில்
அஞ்சுபேர்தனக்கதிகமிருக்கவிடமில்லை ௨௫௯

மூடாதவாசல்களைக்கண்டு-பார்த்து
மூடினாலுசரவொருமுகட்டொழுக்குமுண்டு ௨௬௰

தேடாதபொருள்சிலவுகாணும்-வைத்த
தீபமுந்தெரியாதுதோணாமல்தோணும் ௨௬௧

கூடாதுகுறைவீட்டைநம்ப-சற்றே
குந்தவைக்கமுடியாதுநசுநசுப்புரொம்ப ௨௬௨

குறம்பாடிக்குஞ்சிகளைவாங்கும்-உங்கள்
குறவருடபக்கியெல்லாங்கூரையிலேதூங்கும் ௨௬௩

வரம்பேதுமில்லையென்னாளும்-யென்று
வடிவேலர்சொல்லவேவள்ளிமின்னாளும் ௨௬௪

தமக்கென்றுசிறுகுடிசைகட்டிகுறவர்
தானிருப்பதுவேவசையில்லாதகெட்டி ௨௬௫

உமக்கொருதலத்தினிலும்நாடி-சுவாமி
ஒண்டவிடமில்லாமல்மலைக்குமலையோடி ௨௬௬

கையிலரைக்காசுமேயில்லாமல்-வீடு
கட்டியேகுடியிருக்கவகையுமறியாமல் ௨௬௭

வெய்யிலிலும்வேனிலிலுங்காய்ந்துசுவாமி
மெத்தவருஷித்தமழைபனியால்நனைந்து ௨௬௮

இருப்பதுவைக்கண்டுமனம்வாடி-உம்மை
யிவ்வுலகிலுள்ளவர்களெல்லோருங்கூடி ௨௬௯

சிறக்கவேகோவில்களமைத்து-உமக்கு
செம்பொன்மணியாபரணம்விருதுகள்சமைத்து ௨௭௰

வடிவேலவாவென்றுயெண்ணி-உம்மை
வரிசையிட்டுவைத்தார்கள்பிரதிஷ்டைபண்ணி ௨௭௧

அடியவர்கள்புண்ணியமீதையா-நீரும்
அழகானகோவில்களிலிருக்கிறதுமெய்யா ௨௭௨

தேருமதகரிபரியுமிரவல்-உமக்கு
ஜெயமேளபேரிகையுங்கோவில்களுமிறவல் ௨௭௩

ஏறுமயில்வாகனமிரவல்-உமக்கு
யிட்டநவரத்தனபணியாபரணமிரவல் ௨௭௪

இத்தனையுமுமக்கிரவல்த்தானே-குறவர்
இருப்பிடத்தைப்பழிக்கிறீரெண்ணுமலவீணே ௨௭௫

வெற்றிவேலதுதானேசொந்தம்-உமக்கு
வேறேயொருஆஸ்த்திகளின்மேலென்னதொந்தம் ௨௭௬

மச்சமுனிமறைபொருள்களாலும்-உங்கள்
வங்கிஷவகுப்புகளைச்சொன்னுரேகேளும் ௨௭௭

மச்சானேமறையோதும்வேதன்-உமக்கு
வாய்த்ததொருமாமனேஅளவளந்ததாதன் ௨௭௮

ஆத்தாளேபாளுருப்பறச்சி-அவளுக்
கருமையுள்ளதமையனும்வளர்தவளுமிடைச்சி ௨௭௯

தாத்தாவேமீன்காரக்கரவன்-உமக்கு
தளகர்த்தனைவனும்நல்லகுலமறவன் ௨௮0

அரனுமொன்றுமையீன்றதய்யா-சங்க
மாண்டியல்லோசாதியிலேசொல்வார்கள்மெய்யா ௨௮௧

வரமுறைகளில்லாதநாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள்தெரியாதோபலசாதிக்கூட்டம் ௨௮௨

இதற்குமுன்னேநானறிந்தாலும்-உமக்கு
இசைவேனோநீர்குட்டிக்கரணம்போட்டாலும் ௨௮௩

அதற்கென்னசெய்யலாமையா-நாங்க
ளானாலுங்குரச்சாதியென்பதும் பொய்யா ௨௮௪

பண்டாரம்நானென்று கத்தியெந்தன்
பரணைதிரேவந்தீரேயதுவென்னபுத்தி ௨௮௫

கொண்டுகுலம்பேசுவதுபேச்சோ-சுவாமி
கொய்ததினைமாவுக்கெனகெஞ்சினதும்போச்சோ ௨௮௬

பேருதெரியாமலுருமாறி-வந்து
பிசகுசெய்தமாதரியினாலேமறமீறி ௨௮௭

பாரமதயானையும்வராவிட்டல்-உமது
பாசாங்குக்குள்ளாகமாட்டேனில்லாட்டால் ௨௮௮

வழகியிந்தாடிகுறவஞ்சி-யென்று
வனவேடன்போல்வந்துயென்னெதிரேகெஞ்சி ௨௮௯

களையாருதெனவாதுமுட்டி-நீரும்
காரியங்கொண்டபின்பேசுகிறீர்கெட்டி- ௨௯௰

வலியநாண்வந்தேனைதொட்டு-நீரும்
வஞ்சகம்பேசுகிறீரதுவென்னசெட்டு ௨௯௧

சலியாமால்நீருறுதிசொன்ன-மொழிகள்
தவறுவரோகலிகால மானாலுமென்ன ௨௯௨

பொன்னடி துலங்கியயென்மாமி-பெற்ற
புண்ணியனேயனுதினமுமகலாமல்சாமி ௨௯௩

யென்னருகிலிருமென்று கேட்டால்-சுவாமி
யென்குலத்தைநீர்பழிக்கயுமக்குவிளையாட்டா ௨௯௪

வையகத்துக்கேர்க்காதுயென்னை-நீரும்
வஞ்சகமதாயிழந்து பேசுவதுதன்னை ௨௯௫

தெய்வானையோசொல்லிவிட்டாள்-எந்த
சிறிக்கியுமக்கிவ்வளவு சூதுசொல்லிதொட்டாள் ௨௯௬

எப்படியோநானறியவில்லை-லோக
மெங்கும்நீர்போகாதவிடமொன்றுமில்லை ௨௯௭

இப்படியுமருந்திட்டதாரு-உமக்கு
யேலாதோசொல்லவந்தமங்கையர்கள்பேரு ௨௯௮

வருந்திவிருந்தளித்தவளைச்சொல்லும்-அவளை
மயிர்பிடித்துகொண்டாறேன்சற்றேயிங்கேநில்லும் ௨௯௯

மருந்திடுமயக்கமில்லாவிட்டால்-எனக்கு
பதில்சொல்லமாட்டீரோநானெதுவுங்கேட்டால் ௬௰

முருக்குவளைதாதிகளேவாடி-நம்ம
முத்துலிங்கசுவாமியேநீகூட்டிவாபோடி. ௬௰௧

கருதுமருந்திடுபிசகுதோணும்-எந்தன்
கணவனெனுங்கந்தருக்குக்கைபார்க்கவேணும் ௬௰௨

மின்னாரேயென்றிவளுஞ்சொல்ல-யெங்கள்
வேலரிதுபுதுமையெனக்கேட்டவருமெள்ள ௬௰௩

யென்னடிவீண்யோசினைகள்கொண்டாய்-நானும்
யெவள்விட்டிலேயிருந்துண்ணதைநீகண்டாய் ௬௰௪

என்னுடையசொல்வருதிமீறி-நீயும்
எதிர்பேசினதினாலேயுன்னைநான்சீறி ௬௰௫

சொன்னவசையல்லாதுகண்ணே-சும்மா
தோகையேநானுமுனைபேசுவனோபெண்ணே ௬௰௬

மயங்காதேநீவள்ளிமாதே-உந்தன்
மனமறியநான்சொன்னதல்லாதிப்போதே ௬௰௭

ஜெயமாகநான்போயிவருவேன்-வள்ளி
தினமுமுனைப்பிரியாமல்தெரிசனமுந்தருவேன் ௬௰௮

உந்தனைவிட்டகல்வேனோமானே-யென்று
யுபசாரஞ்செய்தங்கிருக்கையிலேதானே ௬௰௯

கந்தனையுங்கோவிலுக்குள்தேடி..அங்கே
காணாமல்தேய்வானையம்மன்மனம்வாடி ௭௰

மங்கையரேசந்த்ரப்பிரகாசன்-அந்த
மாணிக்ககெங்கைக்குபோனமுருகேசன் ௭௰௧

யெங்கேயெனவேலவனரத்தேடி-நீங்க
ளிதுநிமிஷம்வரவேணுமென்றிடவேயோடி ௭௰௨

தர்திபர்களெல்லோருஞ்சென்று-யெங்கள்
சண்முகவேலாயுதனைத்தேடினொன்று ௭௰௩

ஆதிசிவமாணிக்ககெங்கை-தீர்த்த
மாடவந்தவேலவரைக்கண்டீர்களோயிங்கே ௯௱௯௪

பதித்தபிறைநுதலழகியாளே-அவள்தன்
பர்த்தாவைக்காணேனென்றுதேடவந்தேனே. ௯௱௯௫

கதித்தபுகழ்கொண்டமுனிவோரே-யெங்கள்
கந்தனையுங்கண்டதுண்டோசொல்லுவீர்நீரே. ௯௱௯௬

காணிக்கைகொண்டுவந்தோரே-எங்கள்
கட்டழகிதெய்வானைமணவாளனைரே ௯௱௯௭

மாணிக்ககெங்கைநீராட-யிங்கு
வந்தவரைகாணீர்களோயினியெங்கேதேட ௯௱௯௮

பாங்கியர்கள்நதியெங்குந்தேட-கோவில்
பணிவிடைக்காரர்தெருவீதிவழிநாட ௯௱௯௯

எங்கியவர்தேடுவதுகண்டு-சுவாமி
யெங்கோனுஞ்சிந்தையிலறிந்தன்புகொண்டு ௲

நினைவில்மயக்காததெய்வானை-யிந்த
நிமிஷமேகூட்டிவாவென்றேவுஞ்சேனை ௲௧

எனையழைக்கவேணுமென்றுதேடி-வாறார்
வந்திழையேநான்போயிவரவும்விடைதாடி ௲௨

தாடியென்றுசொல்லவேதிகைத்து-வள்ளி
தையலருஞ்சுவாமிதனைப்பார்த்துமேநகைத்து ௲௩

தேடிவந்தபேர்களைநானடிப்பேன்-அந்த
தெய்வானைவந்தாலுமேசண்டைபிடிப்பேன் ௲௪

என்னுடைகணவனையுந்தேட-அவளுக்
கென்னவதிகாரம்விடைகேள்கருகிறீரோடா ௲௫

மன்னவாயிதுவென்னவென்றே-சொன்ன
வள்ளிதனையுபசாரஞ்செய்தருகில்நின்றே ௲௬

யெனக்குரியமானேநீகோபம்-இப்போ
யென்பேரில்வைக்காதேவீண்மனஸ்தாபம் ௲௭

உனக்குநான்பிசகுசெய்வேனோ-பெண்ணே
யோசனைகள்செய்யாதேநான்மறப்பேனோ ௩௨௮

போய்வாறேன்வள்ளிதயவாக-யெனக்கு
புகழ்ந்துவிடைதாடிதெய்வானையிடமேக ௩௨௯

வாய்திறந்துசொல்லுமனமகிழ்ந்து-யென்று
வடிவேலர்கேழ்க்கவேவள்ளியுமுகந்து ௩௩௰

மறைபுகழுகின்றவடிவேலா-சுவாமி
மனவருத்தமில்லாமல்போயவாருஞ்சீலா ௩௩௧

இறையவருக்குகந்தமகனாரே-யென்று
யிவள்சொல்லவேலர்வழிகூடிநடந்தாரே ௩௩௨

சித்திரவடிவேலவர்நடந்தார்-இங்கே
தேடிவந்ததாதியர்கள்கண்டடிபணிந்தார் ௩௩௩

வெற்றுமயிலோனன்புகொண்டு-கோயில்
மேவியதெய்வானையையுங்கண்டெதிரெசென்று ௩௩௪

மங்கையரேயெனைத்தேடுவானேன்-நம்ம
வள்ளியம்மைதன்னுடையகோயிலுக்குப்போனேன் ()

செங்கமலமாதேயென்கண்ணே-யிப்போ
தேடினதுமென்னவகைசொல்லாயோபெண்ணே ௩௩௬

தெய்வானையென்றார்துணிந்து-அந்த
தேவிசெவ்வேள்பாதமலரடிபணிந்து ௩௩௭

வைபோகமானதடிவேலே-உடைய
மணவாஉமக்குநிதமிதுதானோவேலே ௩௩௮

இளையாள்மேலிருக்கிறபாசஞ்சுவாமி
யென்பேரிலேனில்லையுமக்குவிசுவாசம் ௩௩௯

அணுழயாதவிருந்தோநீர்காணும்-வள்ளி
யவள்மனைக்குநிதம்வலியப்போகவோவேணும் ௩௪௰

முழுக்கவேயும்மாலேயேச்சே-சாதி
முறைதவறிக்குறவருடசம்மந்தமாச்சே ௩௪௧

இழுக்கானசாதியிலேகி-மாலை
யிட்டாலுமேன்மையதுதவறுவரோயோகி ௱௪௨

அடிக்கடிநீரவள்மணக்குப்போனால்-மைத்த
வலக்களிப்பாகவேசொல்லுவாளானால் ௱௪௩

குடிதனிலுயர்ந்தவளுமில்லை-வள்ளி
குறவர்குலமானதால்சொன்னேனென்சொல்லை ௱௪௪

நிசமென்றுநீரெண்ணுவீரோ-உமக்கு
நேர்ந்ததும்வள்ளியுடமோகமதவீரோ ௱௪௫

அசையாமலானந்தமீறி-வள்ளி
ஆசைகொண்டுபேசுகிறீர்நானுமக்குப்பாரி ௱௪௬

யாகிநானெடுத்ததென்னகோட்டை-புவியில்
அறியாரோநீரெனக்குதேடிவருந்தேட்டை ௱௪௭

தேகியெனவாண்டிபோலானீர்-வள்ளி
தேவியவள்தினைமாவைதின்கவேபோனீர் ௱௪௮

திரிபுவனையருள்பெற்றபாலா-உமது
சித்தமதுவெப்படியோகதிரைவடிவேலா ௱௪௯

அரிமருகரேயென்றுரைக்க-யெங்க
ளாறுமுகன்சொல்லுவார்தெய்வானைமெய்க்க ௱௫௰

மானேநான்உன்வருதிபெற்றேன்-பினபு
வள்ளிதனைமாலையிட்டுகூட்டிவந்துவைத்தேன் ௱௫௧

தேனேயென்மேற்பிழைகளில்லை-உனக்கு
தெரியாதோவீணாவில்பேசுவதுதொல்லை ௱௫௨

கோவிலுக்குநீபோடியென்று-யெங்கள்
குமரேசன்சிம்மாசனத்திலேயென்று ௱௫௩

சேவலொருகையினிலிருக்க-யெங்கள்
சித்திரவடிவேலவருமேகொலுவிருக்க ௱௫௪

கூடதீவாராதனைக்கி-வந்து
சூழ்ந்தவர்கள்கோடானுகோடியன்றைக்கி ௱௫௫

அடியவர்பணிந்து துதிபாட-கதிரை
　　ஆறுமுகன்மீதினில்கவிமாலைசூட ௫௬

சிம்மாதனத்தினிலிருக்க-யெங்குஞ்
　　ஜெயஜெயெனவந்தவர்கள்சூழவேபெருக்க. ௫௭

அம்மாபரஞ்சோதிபாலன்-நல்ல
　　அன்புடன்னருளுவாராறுமுகவேலன். ௫௮

துன்பவினையணுகாமல்த்தானே-நீங்கள்
　　சுகமாகவாழ்வீரென்றெல்லவர்க்குந்தானே ௫௯

தென்கதிரைவேலரருளாக-வந்த
　　தேவர்களுமனிதர்களுந்தங்கள்பதிக்கேக ௬௰

சித்தர்களும்வந்துநிதம்பணிய-யிந்த
　　செந்தமிழ்தனக்குதவிசெய்சுப்பிரமணிய. ௬௧

கர்த்தனருளாலேகுறைவில்லை-ஆருங்
　　கதிர்காமமென்றுலும்வறுமைகளுமில்லை ௬௨

தேவர்களுமுனிவர்களும்-யெங்கள்
　　திருமாலுமயனரனுமுமையாளும்வாழி ௬௩

நாவலரும்பாவலரும்வாழி-வள்ளி
　　நாயகன்மேற்கவியிதென்னுளும்வாழி. ௬௪

புள்ளிமயில்வடிவேலும்வாழி-யிந்தப்
　　புவியெங்கும்நகரத்தார்புகழ்பெரவேவழி. ௬௫

வள்ளிதெய்வானையுடன்மேவி-யோக
　　வாழ்வுபெறுங்கதிரேசனென்னுளும்வாழி. ௬௬

கதிரேசன்பேரில்ஆனந்தக்களிப்பு

முற்றிற்று.

உ

சிவமயம்.

கதிர்காமத்துஏசல்.

சீர்வளருங்கதிரை நாதன்மேல்சிந்துபாட
சித்திவினாயகனையெண்ணியே-வாலை
சத்திசிவனைத்துதிபண்ணியே ௧

சத்திசிவனருளும்வெற்றிவேலவர்மலர்த்
தாளிணைதன்னைமறவேனே-கந்த
வேளெனுமெங்கள்முருகோனே ௨

கோனெனுமிந்திரனுந்தேவருந்துதிசெய்யுங்
கும்பன்குருவைப்பணிந்தேற்ற-வெகு
யின்பமுடனேகதைவாழ்த்த ௩

யின்பமுடனேவருமன்புள்ளதோழியரே
யெங்குலதேவனருள்சேரும்-இந்த
தென்கதிர்காமமதைப்பாரும் ௪

தென்கதிர்காமமென்றால்யெங்கும்பிரகாசமாக
சேவலக்கொடிதுலங்குதேதையா-யிந்த
மாவளமாநகரிலத்தானையா ௫

மாவளமானயிந்தமாநகர்தன்னில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகோன்பெண்ணே-வேல
ரிங்கேயிருக்கிறார்தான்கண்ணே ௬

இங்கேயிருக்கிறவர்செங்கைவேலவரென்றால்
யிந்தமதகரிமேலப்பாரையர்-மேவி
யந்தாபவனிவாறதாரையா ௭

அந்தாபவனிவரும்கந்தன்பன்னிருகையன்
ஆனைமேலேறிவருவோரடி-தேவர்
சேனைசேனாதிபதிதானடி ௮

சேனாதிபதியிவரானைமேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும்லோலனை-வெகு
அருமையாயீன்றவளார்வேலனை ௯

அருமையாயீன்றவளுந்திருமாலுடன்பிறந்த
ஆத்தாளையெங்கள்பரமேஸ்வரி-கைலை
காத்தாளேமங்கைமங்களேஸ்வரி ௰

காத்தளேசெங்கைவேலனுத்தாளிவளென்றீரே
கயிலாசநாதர்க்கிருளாறு-யெனக்
கொயிலாகசொல்லுமறுசீரு ௰௧

ஒயிலாகயீஸ்பரியுங்கயிலாசநாதருக்கு
உத்தமிசொந்தமனையாளடி-வாலை
சத்திசிவனென்பார்கள்கேளடி. ௰௨

சத்திசிவனையவர்பெற்றிடும்ரதிமதன்
தானவந்தெதிர்த்ததென்னசீரையா-சிவன்
ஏனவர்தன்னையெரித்தாரையா ௰௩

ஏனெரித்தாரென்றுயேமானையுடையவர்மேல்
யேதுக்குப்பாணமதனேனெய்தான்-சிவன்
வாதுக்கனலாகவேதான்செய்தான் ௰௪

வாதுக்கெதிர்த்துவந்தபோதுவிஜையன்வில்லை
வாங்கிசிவனையடித்தேதவைதான்-சிவன்
தாங்கியருளவர்க்குயேனசெய்தான் ௰௫

தாங்கினதுதவத்தாலோங்கியபார்த்தனனுந்
தானேபொறுத்தாரருள்சிந்தையார்-இந்த
ஆனைமேல்வாறகந்தன்தந்தையார் ௰௬

ஆனைமுகமும்பெரும்பானைவயறிலங்க
அந்தாயிருக்கிறாரேபாரையா-ஒரு
தந்தமிலங்கியவராரையா ௰௭

தந்தமதுதுலங்கவைந்துகரமிலங்க
தனியேயிருக்கிறவர்தான்பெண்ணே-வள்ளிக்
கினியகுமரன்தமையோன்கண்ணே ௰௮

இனியகுமரனையுங்கனிவாய்வளர்த்தெடுத்த
யீசனுக்குயிந்தப்பிள்ளையேனோ-தந்தி
வேஷமெடுக்கவிதிதானோ ௰௯

வேஷமெடுத்துகண்டேசிவள்ளியஞ்சி
வேளெனுங்கந்தனைக்கொண்டாடினாள்-ஒரு
தாழ்வன்றிமாலையிடக்கூடினாள் ௨௰

தாழ்வன்றியேபுவியில்வாழ்வுமிகுந்தகந்தன்
சங்கையில்லாமல்கெஞ்சிநேரே-குற
மங்கையைக்கூடிக்கொஞ்சினாரே ௨௧

மங்கைகுறவருடதங்கையல்லடிபெண்ணே
வந்தபகவன்முனிவேண்டி-ஆதி
சொந்தமாய்ப்பெற்றவள்ளிதாண்டி ௨௨

சொந்தமாய்வேலனுக்குயிந்தவள்ளிக்குமுன்னே
சூட்டவில்லையோமணமாலை-திருப்
பூட்டவில்லையோபுவிமேலை ௨௩

பூட்டவேதெய்வானையைக்கேட்டுமுன்னாளிலே
பூமணுஞ்செய்தாரடிவேலன்-ஆழி
வாமணன்தங்கையருள்பாலன் ௨௪

வாமணனோமஞ்செய்துநேகமமாய்மாலையிட்டு
வந்தவர்வட்டக்குடைமின்ன-யிந்த
தந்திமேலேறிவாறதென்ன ௨௫

தந்தியிலேறிவாரதிந்தத்திருவிழாவின்
சங்கையதுதானடிகண்ணே-சுவாமிக்
கிங்கேவளமையிதுபெண்ணே ௨௬

இங்கேவளமையென்றாலெங்கும்பகலைப்போலே
யிருபுறமுஞ்சனங்களேந்தியே-கொண்டு
வருகிறதீபமென்னகாந்தியே ௨௭

காந்தியுடனேகையிலேந்திக்கொண்டாடிச்சிலர்
கர்ப்பூரதீபமதைத்தூண்டி-வாறார்
சுப்பிரமணியனுக்கேதாண்டி ௨௮

தாண்டியுபசரித்துவேண்டியதர்மஞ்செய்ய
சத்திரங்கட்டிவைத்ததாயையா-வேலை ௨௯
சித்திரமானதிதைப்பாரையா

சித்திரமானவன்னசத்திரங்கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர்நகரத்தாரடி-வைத்த
நந்தவனத்தைச்சுற்றிப்பாரடி ௩௰

நந்தவனமும்வைத்துசொந்தமடங்கட்டிய
நகரத்தாரென்றாலவராரு-அவர்
புகழ்பெற்றிருப்பதெந்தவூரு ௩௧

ஊரெனும்பாண்டிதேசத்தாரெனும்பேர்புகழ்ந்து
ஒங்கியதொண்ணூற்றாறாரடி-வெகு
பாங்குள்ளநாட்டுக்கோட்டையாரடி ௩௨

நாட்டுக்கோட்டையாரென்றால்வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகையேதையா-புகழ்
நீட்டும்நகரத்தார்கள்தானையா ௩௩

தானையாவென்றுசொன்னமானேகொழும்பினிலே
சந்தோஷமாகவேயாபாரமுஞ்-செய்ய
வந்தவர்களிவரென்னேரமும் ௩௪

என்னேரமுங்கொழும்பில்சொர்ன்னயாபாரஞ்செய்தால்
யிந்தக்கதிர்காமத்தைநாடியே-யிவர்
வந்ததென்னபுகழ்கள்பாடியே ௩௫

பாடியேவேலெடுத்துஆடிக்கொண்டாடிமாதப்
பௌரணைக்கேவருவாரடி-யிங்கே
வருஷங்கள்தோறும்வெகுசீரடி ௩௬

வருஷங்கள்தோறுமிங்கேவருவாரானாலுஞ்சொந்த
மானகர்க்கேகிலைப்போதுகாண்-யிங்கே
தான்வேலெடுத்துவாரதாருகண் ௩௭

ஆருகாணென்றாய்புகழேழும்புதுக்கணக்குக்
காகவந்தநகரத்தார்கள்-வெகு
சேகரமாகவருவார்கள். ௩௮

சேகரமானகனயோகரெனுமிவர்கள்
செல்வமுகுந்தவரோதோணும்-நல்ல
கல்விமிகுந்தவரோகாணும். ௫௯

கல்வித்திறமையுண்டுசெல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்றபேருக்கே-வெகு
விந்தையாய்நாட்டுக்கோட்டையாருக்கே. ௬௰

நாட்டுக்கோட்டையாருக்குதீட்டும்புகழ்படைத்த
நகரத்தாரென்றிவரைத்தானையா-யெங்கும்
சகலபேர்களும்சொல்வதேனையா ௬௧

சகலயர்பாரதர்மஞ்சகலதிருப்பணியும்
தவறாமல்ச்செய்துவந்ததோதினால்-புவியி
லிவரேநகரத்தாரென்றோதினார். ௬௨

இவர்களைப்போலனேகர்யெவளவோதர்மஞ்செய்தார்
யேனையாகாணுமந்தநாளில்லை-அப்போ
தானவர்க்கந்தபேரேனில்லை ௬௩

பேர்புகழ்சரிகைகிரிகைநேருங்குகனருளும்
பெற்றதினால்நகரத்தாரே-யென்று
யெத்தலத்திலுமுரைத்தாரே ௬௪

எத்தலத்திலும்புகழ்பெற்றமதுரைச்சொக்கர்
யிருக்குங்கோயிலையெல்லாந்தானையா-பொன்னால்
சிறக்கவலங்கரித்ததாரையா ௬௫

ஆறென்றாய்பெண்ணேயெங்கும்பேறானதென்மதுரை
ஆலையத்தைப்புதுப்பித்ததாரடி-வடி
வேலனருள்நகரத்தாரடி. ௬௬

வேலனைப்பெற்றசத்திவாலைசிவகாமித்தாய்
மேவுஞ்சிதம்பரநடேசனார்-சபை
யாவும்புதிபிக்கிறதாரையா ௬௭

புதிப்பிக்கவேணுமென்றுமதிப்பித்துசெய்தார்
குவியில்ப்புகழ்நகரத்தாரடி-முகில்கள்
குவியும்தண்மைபோல்கொடையாரடி. ௬௮

கொடையார்கள்தர்மம்செய்யசடையாரோவாணிபத்தில்
கூடும்முயர்ச்சியுள்ள வாழ்வுளோர்-புகழ்
நாடும்வேதாகமத்தின்கேள்வியோர் ௪௯

நாடுமயோத்திகாசிராமேஸ்வரம்வரைக்கும்
நகரத்தார்தர்மம்நிலைநாட்டினார்
சுபடுஜயமங்களத்தைச்சூட்டினார் ௫௰

சூட்டியவர்க்கருளைத்தீட்டியவேலவர்மேல்ச்
சொன்னகவியெங்கும்பிரகாசம்-ஒகோ
மன்னவருமக்கெந்ததேசம். ௫௧

தேசமென்பதுராமன்சேதுபந்தனஞ்செய்த
சீமான்திருப்புல்லாணிதானடி-தங்கம்
ராமசாமியென்பதுநானடி ௫௨

நானடிக்கடிகந்தநாதன்தனைப்பணிய
நல்லதினங்களெப்பகாணும்-அதைச்
சொல்லநாயிங்கேவரவேணும் ௫௩

சொல்லக்கேள்சுக்கிரவாரம்சோமவாரங்கள்மாதம்
கோதானகார்த்திகைக்கித்தானடி-வந்தால்
பாதகங்களகன்றுபோமடி. ௫௪

பாதகந்தன்னைப்பரிகாசமேசெய்யுங்கந்தன்
பாதந்தனைப்பணியவேணும்-நாங்கள்
காதல்கொண்டேவருவோங்காணும். ௫௫

காணுந்தவமிகுந்துகதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர்யோகண்டி-நல்ல
தொந்தமிட்டாடுமயில்வாகநண்டி ௫௬

வாகன்செந்தூராநென்றால்வையாபுரிபழனி
மாமலைமேலிருப்பதாரு-நல்ல
சாமிமலைக்குகந்ததாரு. ௫௭

சாமிமலைமுதலாய்ப்பூமிதனிலுமுள்ள
தலங்களெல்லாமிவர்தாண்டி-மேவி
விளங்குங்கதிரைப்பதியாண்டி ௫௮

ஆண்டிக்கிவ்வுலகெல்லாம்வேண்டியபதியென்றால்
அத்தலங்களிலெதுகாணும்-இவர்
சித்கம்வைத்திருப்பதெங்கோனும். ௫௯

சித்தம்வைத்திருப்பதுமுத்தரெனுமடியர்
சிந்தையைவிட்டகலமாட்டார்-மாயன்
செந்திருவாழ்கதிரைநாட்டார் ௬௰

நாட்டாரடியவர்மேல்நாட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில்ச்செல்வாரோ-நாமும்
கேட்டவரங்கள்தருவாரோ ௬௧

கேட்டவரந்தருவார்நாட்டுப்பதியில்செல்வார்
கேசவன்தன்மருகனார்க்கே-யெண்ணி
வாசமாய்நம்பிநடந்தோர்க்கே ௬௨

வாசமுடனேகதிரேசனைத்தொழுதிட
வாருமையாபுகழலாலி-யினி
கூறும்ஜெயமங்களவாழி ௬௩

வாழிகதிரேசனுவாழிவள்ளிதெய்வானை
வாழியடியவர்கள்வாழி-யெங்கள்
மேழிக்கொடிக்குமுலம்வாழி ௬௪

கதிர்காமத்தூஞ்சல்.

முற்றிற்று.

சிவமயம்.

கதிர்காமக்கும்மி.

சீர்வளம்பெற்றகுயில்கூவும்நல்ல
தென்கதிர்காமமதில்மேவும்
ஆறுமுகன்கதிரேசனுமேலெங்கள்
அண்டர்கொண்டாடியவாசனுமேல் ௧

மங்களம்சேரும்குமிப்பாடவந்து
மாணிக்கப்பிள்ளையார்காப்பாட
சிங்கத்திலேறியபூரணியேயெந்தன்
செந்தமிழுக்கேயருள்நாரணியே உ

சுந்தரநீறணிஆறுமுகன்மீதில்
சொல்லுந்தமிழுக்குநாலுமுகன்
சிந்தைக்கிசைந்தவளைவாழத்திக்கவி
செப்பும்புலவர்களைப்போற்றி ௩

சந்தோஷமாய்க்கும்மிப்பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையுமேசிறக்க
வந்துதவிசெய்யவேணுமம்மாநானும்
வாழ்த்துங்கவிமாலைபூணுமம்மா ௪

கந்தன்கதிர்காமவேலனேபுவி
கார்க்குமறைமுதலோலனே
யெந்தனுக்கேயனுகூலனேதொழு
தேத்திப்பணியவும்சீலனே ௫

மங்கையரல்லோரும்வாருங்கடியிந்த
　　மாணிக்ககெங்கைநீராடுங்கடி
சிங்காரமாய்ப்பணிபூட்டிக்கொண்டுமுகம்
　　சிறந்தகுங்குமமிட்டுங்கடி ௬

கூந்தலுக்கேமலர்மாலைகட்டிநல்ல
　　கோலவர்ன்னப்பட்டுச்சேலைகட்டி
சேர்ந்திணையாகவேபாடுங்கடிகந்தன்
　　சேவடிபோற்றிக்கொண்டாடுங்கடி ௭

ஐயமில்லாமலேநாடிவந்தயிந்த
　　ஆறுமுகன்பதிதேடிவந்த
செய்யிழைமார்களேவாருங்கடிகவிச்
　　சிறைப்பைச்சொல்லுகிறேன்கேளுங்கடி ௮

ஓதியசெந்தமிழ்ப்பாடவேயிந்த
　　ஊர்வளஞ்சொல்லிக்கொண்டாடவே
யேதுபிழைகளிருந்தாலும்சுவாமி
　　ஏழைக்கிரங்கியெனையாளும் ௯

ஆறுமுகமென்றுபேருடையானெனை
　　யாளுங்கதிர்காமத்தூருடையான்
சீருடையான்வடிவேலுடையான்வெகு
　　சித்தர்கள்போற்றியகாலுடையான் ௰

சத்திக்குகந்தமகன்தானேயிவர்
　　தந்தையும்முக்கண்சிவன்தானே
யெத்திசையும்புகழ்மால்மருகன்றனை
　　யேத்திக்கொண்டாடலாம்வாருங்கடி ௰௧

வாசம்புகழ்கதிர்காமத்திலேமழை
　　மாரிபெய்யவுஞ்சந்தோஷத்திலே
ஆசைமிகுந்துழவேத்தினர்சென்னல்
　　அள்ளிவயலெங்கும்தூத்தினர் ௰௨

செந்நெல்களெல்லாம்விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடுமேகிழ்ந்திருக்கும்
கன்னல்தழைத்தெங்கும்முத்தீனும்பூங்
காவுகளெல்லாம்வலந்தோனும் ௰௩

மாவுங்கொய்யாவுமடர்ந்திருக்கும்புன்னை
மாம்பிலாவுந்தொடர்ந்திருக்கும்
கூவுங்குயில்மயில்கூட்டமும்வெகு
குஞ்சரங்களெங்கும்நாட்டமும் ௰௪

கானகத்தில்மயில்ரொம்பவடிபுலி
கரடிமான்மரைக்கும்பலடி
வானரங்கள்விளையாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள்பாடுவதும் ௰௫

மாணிக்ககெங்கையாரோடுவதும்நிதம்
மாதவர்வந்துநீராடுவதும்
காணிக்கைகொண்டுவருவாரேகதிர்
காமத்தைநோக்கிவெகுபேரே ௰௬

வீதியலங்காரமெத்தவடியதில்
மேவுஞ்ஜனங்களும்சுத்தமடி
சோதிமயமானகோபுரமுங்கோவில்
சூழ்ந்ததிருமதில்தாவரமும் ௰௭

குமரன்கோவிலிலங்குதுபாரிதில்
கொட்டியமேளமுழுங்குதுபார்
அமரர்கூடியகூடமும்வள்ளி
யம்மைதெய்வானைக்கிமாடமும் ௰௮

என்னசொல்வேன்கதிர்காமத்தைகோவி
லிலங்கியலங்காரத்தை
சன்னிதிகாவலும்சிங்களவர்கோவில்
ஸ்த்தானிகராவதும்சிங்களவர் ௰௯

நன்னகரெங்கினும்சிங்களவர்கோவில்
நாட்டியக்காறரும்சிங்களவர்
மன்னனசுக்குருத்தவர்கள்விட்ட
மானியங்கள்ரொம்பப்பெற்றவர்கள் ௨௰

புத்துமதத்திலுகந்தவர்கள்கந்தன்
பூசையில்நித்தமிருந்தவர்கள்
நித்தமும்சிங்களர்கூடுவதுமிலர்
நேர்ந்துபணிந்துகொண்டாடுவதும் ௨௧

தெய்வானைகேத்தமலர்கள்கொய்வார்லாட
தேசசன்னியாசிகள்பூசைசெய்வார்
வைபோகமிப்படியுள்ளதடிஸ்தல
மகிமையைச்சொல்லநல்லதடி ௨௨

யெண்டிசைதோறும்புகழ்வாசன்கொழும்
பெங்கும்சிறந்தகதிரேசன்
கண்டியில்மேவியதீரனடிகந்தன்
காலாயுதக்கொடிவீரனடி ௨௩

செங்கைவேல்வில்லையும்பெற்றவண்டிஅந்த
தென்னிலங்காபுரிமெய்த்தவண்டி
சிங்காரமாகியவேலனடிஅவர்
சிறப்பைநான்சொல்லக்கேளுங்கடி ௨௪

சிறப்பைச்சொன்னவரேகாணும்அந்த
தென்னிலங்கையென்பதுதானும்
யிருப்பதெந்தவிடங்காணும்அதர்க்
கெப்படிப்போனல்தடந்தோணும் ௨௫

கண்டிகொழும்புமிருப்பதெங்கேயிந்த
கார்கடலமத்தியில்த்தீவுமிங்கே
உண்டானகாரணந்தானுமையாஅந்த
உண்மையைச்சொல்லவும்வேணுமையா. ௨௬

சொல்லுகிறேன்கேளடிமின்னளேதேவர்
சொன்னசபதத்தால்முன்னலே
வெல்லவேமாருதம்விசையிலேதள்ள
மேருமுடியிந்தத்திசையிலே ௨௭

வந்துவிழுந்தயிடமாச்சுயிந்த
வாரிக்குமேலேதிடலாச்சு
உந்திக்கமலத்துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணிமதித்தவரும் ௨௮

ஏழுசுற்றுக்கோட்டையாக்கியேயிதர்க்
இலங்கையென்னும்பேர்தாக்கியே
ஆளுமென்றுமனநற்பாலேசொல்லி
ஆண்டதுபோனுக்கிப்பாலே. ௨௯

ராணுவத்தோடேஜெயம்பூண்டான்மன்னன்
ராவணன்தென்னிலங்கையாண்டான்
போனதிரையதாயுகத்திலேவந்த
பொற்கொடிசீதையைவனத்திலே ௩௰

கண்டுசிறையெடுத்தோடிவந்தான்ராமன்
கவிப்படையுடன்தேடிவந்தான்
நின்றுகடலைக்கண்டேதிகைத்தான்அந்த
நேரம்வருணனையுமழைத்தான் ௩௧

சீதையினாலேமனமுகந்துராமன்
தெர்ப்பசயனமதிலிருந்து
ஆதிசேதுவெனப்பேர்பொருதிக்கன்னி
யாகுமரியெல்லைகண்டறுதி. ௩௨

பாப்பிலேபத்துயோசனையாய்கவிப்
படைமலைகொண்டதற்கிணையாய்
உரத்துயோசனைதூரமட்டும்அணை
உண்டுபண்ணிலங்கைக்கோட்டைமட்டும். ௩௩

நடந்துலங்கையைக்கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்றுசென்றபின்பு
அடர்ந்தராக்ஷசதக்கும்பழியதிரு
வணைசிதறுண்டுதான்மறைய. ௩௪

பின்னுமிலங்கையைச்சீராக்கித்தவப்
பெருமையால்கொஞ்சம்பேராக்கி
அன்னாள்விபூஷணனாண்டுவிட்டார்பின்பு
அண்டருலகத்தைச்சார்ந்துவிட்டார். ௩௫

நட்டமுள்ளகயல்க்கண்ணாளேலங்கை
நகரம்நாள்ச்சென்றுபின்னாலே

கோட்டையழிந்துகடலாச்சுயிது
        கொஞ்சமாய்த்தீவிங்கேதுண்டாச்சு ௩௬

அப்பாலித்தீவுசீரில்லாமல்யிதில்
        ஆளனொருவருமில்லாமல்
ஒப்பாதகாடுமலையாச்சுபெரி
        யோர்களுலாவுமிடமாச்சு ௩௭

நயமிகுந்தபெருங்காடுவெகு
        நாளாயிருந்ததின்பிற்பாடு
யியக்கரென்றுராக்ஷசதனும்மதில்
        யிருந்தாசிட்டான்யேச்சவனும் ௩௮

நத்தியேநாகர்சிலகாலம்மேல்
        நாட்டையுமாண்டுவெருங்காலம்
புத்தரும்வந்திதில்நாடினர்சிலர்
        புத்தர்மதத்தைக்கொண்டாடினர் ௩௯

திசைபுகழ்வங்கதேசாதிராசன்
        சிங்கவாகுபெத்தனாயாதி
விஜயராசனும்வந்தாண்டிபூமி
        விஸ்தாரங்கண்டுமகிழ்ந்தாண்டி ௪௰

தலைமன்னாரென்றுபேட்டைகட்டிராஜன்
        தம்பண்ணைநாடென்றுகோட்டைகட்டி
சிலைவலிமையைக்கொண்டாடக்கண்டு
        தென்னனியக்கர்மகள்கூட. ௪௧

செப்பமுடனிதையாளவந்தான்வங்க
        தேசத்ததிபன்மகனிவன்தான்
அப்பாலித்தீவுக்கரசரடிவந்து
        ஆண்டவர்கள்வெகுபேர்களடி

வங்களர்சிங்களர்வெள்ளாளர்யிந்து
        மதசமையத்துவல்லாளர்
யிங்கேவந்துகுடியேறினர்யிதர்க்
        கிசைந்தரசருமீறினர் ௪௩

சிங்களப்பாஷையுமேலாச்சுயிதில
        சிவசமையமுமுண்டாச்சு

மங்கையரேசிலராஜாக்கள்புத்து
மகசமையத்தைமேலாக்க ௪௪

பாண்டிசோழதேசத்திரர்களும்வந்து
பட்டமாண்டமுடிவீரர்களும்
வேண்டியகோட்டைகள்கட்டிக்கொண்டார்மாதம்
வேறுசெய்யசன்டையிட்டுக்கொண்டார் ௪௫

பாவையேயெங்குங்நகராச்சுநல்ல
பாருலகத்திலேபேராச்சு
மேவும்சிவஸ்தலமெத்தவுண்டுயந்த
விஸ்தாரஞ்சொல்லவுமுத்திபுண்டு ௪௬

உன்னிதமானமலேயுமுண்டுயிதில்
லோங்கும்சிவனடிபாதமுண்டு
முன்னீஸ்புரம்வெகுமுக்கியமாம்அதில்
மூலகணேசன்சிலாக்கியமாம் ௪௭

கேட்டவர்க்கேயனுகூலமாம்திருக்
கேஸ்புரமென்றொருதானமாம்
நாட்டமுள்ளநகுலேஸ்புரமாம்சிவ
நாதனுகந்தகோணேஸ்புரமாம். ௪௮

தண்டேஸ்புரம்வெகுதகுதியாம்ஐயன்
சாத்தாக்கோவிலொருபகுதியாம்
எண்டிசைமொய்த்தகுமரபுரம்புக
ளிலங்கும்சுந்திரசேகரபுரம் ௪௯

கண்டவர்மெய்த்தமாவிட்டபுரம்ராஜ
கர்த்தரால்செய்ததனேகபுரம்
தொண்டர்துதிக்கும்தலங்களிதாமயின்னம்
தோணுதிருப்பதனேகமதாம் ௫௰

ராமேஸ்புரமிதைச்சேர்ந்ததடிமுன்னே
ராமனுதனுலமைந்ததடி
பூமிக்குருத்தானமன்னர்மெத்தபட்டப்
பூண்டரசிட்டநகரமெத்த ௫௧

கண்டியென்றும்கோட்டைக்காடிதென்றுநல்ல
கழனிநீர்கொழும்பூரிதென்றும்
அண்டியஊரெல்லாம்கட்டடமாம்கோட்டை
அனுராசபுரப்பட்டணமாம். ௫௨

முத்துச்சலாவத்துறையுமுண்டுகடல்
முழுகிச்சங்குகுளிப்பதுண்டு
ரெத்தினபுரியென்றுஊருமுண்டுஅதில்
ரெத்தினமணிகள்விளைவதுண்டு ௫௩

பன்னகாமம்தம்பறைநாடாம்யாழ்ப்
பாணப்பகுதிவெகுநாடாம்
இன்னமிருக்குதனேகமெல்லையிப்ப
யெனக்குச்சொல்லச்சமையமில்லை ௫௪

கண்டவிடமெல்லாமூராச்சுகோவில்
கட்டியக்கட்டடம்பேராச்சு
திண்டுமுண்டாப்பளிகொண்டார்கள்நல்ல
சிங்களரோடரசாண்டார்கள் ௫௫

கண்டியையாண்டிடும்வீரதுங்கன்யிதில்
கட்சிவிக்ரமராஜசிங்கன்
தண்டிகையேறிசூரர்களும்யிவன்
தலைமுறைவரைராஜர்களும் ௫௬

தொண்ணூத்தாறுமுடிமன்னரடி அதைச்
சொல்லுஞ்சரித்திரமின்னமடி
விண்ணவர்மெய்த்திடுமானகரில்யிதில்
மேவியரசிட்டபேரவரில் ௫௭

கண்டியரசனும்பின்னாலே அவன்
கட்டடம்காணலாம்கண்ணாலே
வண்டனதியாய்க்காரனடி அவன்
வம்மிஷம்நாயக்கராஜனடி. ௫௮

அதற்குமுந்தியராஜர்தொட்டுக்கட்டி
ஆண்டவிடமெல்லாசீருகெட்டு
மதிப்பாதாக்கிடந்தோணுமல்க்காடு
மண்டியிருப்பதும்தானுமே ௫௯

இங்கிர்தன்வீரத்தில்சூரசிங்கன்யிந்த
இலங்கைநாடெல்லாமராஜசிங்கன்
சங்கையுடனரசாளையிலேசீமை
தன்னிலிருந்தந்தவேளையிலே. ௯௰

சிங்காரக்கப்பலில்பறங்கியேயிந்த
தீவுக்குள்ளேவந்துயிறங்கியே
தங்கச்சிகரம்தனைவகுந்துப்புத்தர்
தாவுங்கழனித்திசையடுத்து ௯௧

கோட்டையுங்கட்டிக்கொடிபூட்டியதைக்
கொழும்பென்றுசொல்லிபேர்நாட்டி
வெட்டெழுப்பிக்காலிக்கோட்டைகட்டிநல்ல
விஸ்த்தாரமாத்திரபேட்டைகட்டி. ௯௨

தொட்டதிருக்கோணமாமலையும்அந்த
துறைமுகங்களையாண்டதையும்
ஒட்டாமல்தள்ளிவிரைவாகவந்து
உலாந்தாக்காறருசாராக ௯௩

ஆண்டுசிலகாலம்விட்டார்கள்பின்பு
ஆங்கிலேயர்வந்துதொட்டார்கள்
வேண்டியதர்மம்நிலைநிறுத்தயிந்த
மேதினியையெல்லாம்சீர்திருத்த ௯௪

கும்பனியார்வந்துஒட்டிக்கொண்டார்யிந்த
கொழும்புகோட்டையைக்கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும்வெட்டஆற்றூர்கோடு
வங்காளக்கச்சேரிகட்டஆற்றூர் ௯௫

கண்டியரசனைக்கெடுத்திட்டார்பெருங்
கள்ளர்களைச்சுட்டெழைத்திட்டார்
வண்டிக்கிறோட்டுகளுண்டுபண்ணியிதில்
மாகாணங்களாய்த்துண்டுபண்ணி ௯௬

துறைமுகங்களைநோக்கிகாப்பித்
தோட்டங்களையெல்லாம்சீராக்கி
நிறையயிந்தியாச்சனங்களும்ரேகு
நிறைந்ததீர்வைப்பணங்களும் ௯௭

மின்னல்வேகங்கொண்டதந்திவைத்தார்பேசி
　　விளம்பும்ஆபீசைமுந்திவைத்தார்
என்னசொல்வேனடிமின்னரசேயிந்த
　　இங்கிலிஸ்காரர்தன்னரசே. ௬௮

பூட்டிறயிலையும்நடத்தினர்யெங்கும்
　　புகைவிளக்கையும்பொருத்தினர்
தாஷ்டிகமானகடலலைக்கியூடே
　　தடுத்தணைகட்டியேநெருக்கி. ௬௯

தண்டவளாச்சூட்சம்வைத்தாரேமலைத்
　　தண்ணீரைவாவென்றழைத்தாரே
மண்டலத்தில்புகழ்பெற்றதடிகப்பல்
　　வாறதனேகமாய்நித்தமடி ௭௰

தண்டமிழ்சேர்புவிமெய்த்தவளாம்யிந்தி
　　சக்கரவர்த்திப்பட்டம்பெற்றவளாம்
லண்டனாசாட்சியைச்செலுத்தும்மகா
　　ராணிகட்டளைப்படிநடத்தும் ௭௧

இங்கிலீஸ்காறராலேயல்லோநம்ம
　　இந்தியாவும்லெங்கைத்தீவுமல்லோ
கங்கையும்சிங்காரமுண்டாச்சிவெகு
　　தாழ்வில்லாவாழ்வுகளுண்டாச்சு ௭௨

பூமியில்கள்ளர்பயம்போச்சுவெகு
　　புத்தியும்வித்தையுமேலாச்சு
சாமிகதிரேசன்தன்னருளால்ஒரு
　　தாழ்வொன்றுமில்லையேதோழிப்பெண்ணே ௭௩

தாழ்வில்லாத்தண்மையுடன்வாழும்கவி
　　சாற்றியமன்னவரேகேளும்
ஆழுங்கதிரேசனித்தலத்தில்வந்த
　　ஆரம்பத்தின்கதைசொல்லுமையா ௭௪

ஆரம்பமென்னபுராணத்திடியுகதை
அறிந்தமட்டுமின்னேரத்திலே
கூறவுங்கேளுங்கோபெண்ணரேவர்ன
கோலவிழிக்கயல்க்கண்ணரே ௭௫

அண்டமெல்லாமொருதகத்திலேகட்டி
ஆண்டகிரேதாயுகத்திலே
கொண்டரசாட்சியைச்செலுத்தியேதேவர்
கோனைவெருட்டியேகொளுத்தியே ௭௬

பாரவிணையளுக்கொஞ்சாதவெகு
படைப்பெருக்கத்துக்கஞ்சாத
வீரப்பிரதாபமிகப்பூண்டமன்னன்
வீரமயேந்திரபுரமாண்ட ௭௭

வாசமுள்ளசூரநாளையிலேஅவன்
வந்துபோர்செய்திடும்வேளையிலே
பாசறைவிடுமிதில்த்தாண்டிகந்தன்
படைப்பெருக்கமிதில்த்தாண்டி ௭௮

குன்றெனும்சூரரைத்தாக்கினர்தேவர்
கோனுக்கரசையுண்டாக்கினர்
அன்றுமுதல்கந்தன்வாசமடியிதில்
அண்டர்களுநம்விசுவாசமடி ௭௯

காமன்மைத்துனனைத்தொண்டுபண்ணிகதிர்
காமமென்றபேரையுண்டுபண்ணி
மாமுனிவோர்கள்கொண்டாடிவந்தநம்ம
வள்ளிமணளனிவன்தாண்டி ௮௰

மனன்வரேகவிசொன்னவரேயிங்கே
வாருமையாசொல்லிக்கேளுமையா
மின்னியவேலவனூரவழ்த்தமுறை
விளங்கச்சொல்லும்பணிந்தேற்ற ௮௧

விளங்கும்தீபதெரிசனமும்தவில்
மேளம்துவண்டைமுரசினமும்

முளங்கும்சன்னதிமுன்பாகச்சென்று
மூலஸ்தானத்தைப்பாருங்கடி ௮௨

மூலஸ்தானந்தெரியாமேசபை
முன்னஸ்தமண்டம்தோணுமே
சிலமிருகந்தன்சன்னதியிலிட்ட
திரைமறைப்பிங்கேயேதுக்கையா ௮௩

திரைமறைப்புவளமையடிகந்தன்
சேவடிகாண்பதருமையடி
முறைதெரியாதமானிடர்க்குக்கந்தன்
முன்மணிவாசலுந்தோணாது ௮௪

முன்மணிவாசல்கடக்கணுமேசுவாமி
மூலஸ்தானமடுக்கணுமே
நன்மையுகந்தகதிரேசன்தனை
நானறியவகைசொல்லுமைமா ௮௫

நானுமறிந்ததுமில்லையடிசொன்ன
நம்புவியேயெந்தன்சொல்லையடி
தேனருந்தவழிதோணட்டால்கந்தன்
சேருவைகாணமுடியாது ௮௬

சேருவைகாணமுடியாட்டால்யிந்தச்
சிங்களவரெனும்ஸ்தானிகர்கள்
ஆறுமுகவனறியாமல்நிதம்
ஆருக்கலங்காரம்செய்வார்கள் ௮௭

ஆருக்கென்றால்வர்ன்னப்பேளையொன்றுஅதற்க்
கன்புற்றலங்காரம்செய்துகொண்டு
பாரியகேடகமீதேற்றிவீதி
பவனிவாரதுமுண்டுமடி ௮௮

பவனிவந்திடும்பேளையதுயென்ன
பாவினையாலேசமைந்தது
அவனியெல்லாம்புகழ்ந்தேற்றபேளைக்
கருள்நிறைந்ததுமெவ்விதப்காண் ௮௯

அருள்நிறைந்துசமைந்தவித்தைவெகு
அந்தரங்கமிந்தப்பெட்டகத்தை
குருவறிந்துலக்காட்டால்கண்டு
கொள்ளமுடியாதுவள்ளலையே. ௯௰

வள்ளலுகந்திடும்கோவிலுககுமுழு
வச்சிரத்தட்டோடுபோடாமல்
தெள்ளியமாமணிமேடையெல்லாம்செய்து
செப்போடிட்டதுமேதுக்கய்யா. ௯௧

செப்போடல்லவேதோழியரேயிது
சிவந்தபத்தரைமாத்தாகும்
ஒப்பாதபுவிமானிடர்க்குயிது
செப்போடாகவேதோணுமடி. ௯௨

செப்போடிட்டதைமாத்தையிலேயின்னும்
சீர்திருத்திவரிசாத்தையிலே
அப்போதங்குள்ளமூலஸ்தானத்தை
அறிந்துகொள்ளாரோசொல்லுமையா. ௯௩

அறிந்ததுண்டையனுத்தரவால்பன்னி
ராண்டுக்கொருதரமாத்தினவர்
உரியசுத்தமவுனங்கொண்டுசமா
துகந்தடைந்தவர்கோடியுண்டு ௯௪

கோடிபேருண்டென்றும்சொன்னவரேகந்தன்
கோலுவில்மகிமையும்சொன்னவரே
தேடிககொண்டாடும்கதிர்மலைமேல்க்கந்தன்
சேருவைச்சேகரமெப்படிகாண் ௯௫

சேகரமானமலைகளுண்டுசுத்தி
திரண்டிருண்டவனங்களுண்டு
ஏகமிருகசஞ்சாரமடிமலைக்
கிசைந்துபோனவரில்லையடி. ௯௬

போனவரந்தமலைவளத்தைச்சொல்லி
புகழ்க்கேட்டேனதின்விதத்தை

ஆனாலவரெப்படிப்போனார்போக
லாகாதென்றெவ்விதம்சொல்லுவீர்காண். ௯௭

ஆகாதென்றதுமெய்தாண்டிமுரு
கையனுத்தரவினால்த்தாண்டி
யேகினாலந்தக்கதிர்மலைக்கிவழி
யிசையத்தோணுமிருள்விலக்கி. ௯௮

யிசையும்நல்லவழுயுமென்றீமுன்னே
யேகமிருகசஞ்சாரமென்றீர்
திசைக்கிச்செல்லாமல்த்தட்டிடுமோகண்டு
சேரும்படிவழிவிட்டிடுமோ. ௯௯

விட்டுவிடாததுமெய்யதர்க்கேகதிர்
வேலவனுத்தரவானவர்க்கே
தட்டுப்படாதுமிருகமெல்லாம்வனம்
தாண்டியேயேறிநடந்திடலாம் ௱

நடந்துகாணுவதெந்தமலைகந்த
நாதனிருப்பதுமெந்தமலை
அடர்ந்தமேளத்தொனிகளுண்டோயங்கே
அண்டர்கள்கூட்டமதிகமுண்டோ ௱௧

அண்டர்கள்கூட்டமதிகமுண்டு அப்பால்
ஆறுமுகன்சபையங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாதமானிடர்க்குசபை
காணவுந்தோணாதுதோழிப்பெண்ணே ௱௨

தோணுதென்றதுமெய்யவருமிருள்
சூழ்ந்தவனங்கள்நடந்தவரும்
காணாதமாமலைக்கேறினவர்சபை
கண்டுதொழாமல்வருவாரோ. ௱௩

கண்டுதொழுவதெல்லாமலையுமெங்கள்
கந்தன்கனகசபைமலையே
தொண்டரல்லால்க்கண்டபேருமில்லை அங்குக
துடி-வயிரவன்காவலடி. ௱௪

காவலகொண்டமலைச்சார்பிணைமேலையெங்கள்
காத்தன்பவனிப்பதியினிலே
மேவும்சமாதொன்றிருக்கிறதேயதை
விளங்கச்சொல்லுமெனக்குமதை ௱௫

சொல்லுவேன்கேளுதிரைகடந்தயோகத்
துரியாதீதத்துரைகடந்த
நல்லமுத்துலிங்கசுவாமிக்கடிமுந்தி
ராஜரால்கட்டியகோவிலடி ௱௬

கட்டியகோவிலச்சிறந்ததிலேகதிர்
காமம்சிவஸதலமானதிலே.
முட்டிவணங்கிமுகையதீனென்கிற
முழக்கமேதிங்கேசொல்லுமையா ௱௭

முழக்கமானநபிவரத்தில்வந்து
முத்தியடைந்தனரித்தலத்தில்
வழக்கமாகமுசிலீன்கள்நிதம்
வந்துவணங்குந்தீன்சத்தமடி ௱௮

தீனதுகூறியமாபதியில்நல்ல
சித்திரவேலவன்சன்னதியில்
தானமும்தர்ம்மமும்செய்யவென்றுயன்ன
சத்திரம்கட்டினதார்காணும் ௱௯

கட்டியமாமடம்கெட்டியடிதர்ம்ம
காத்தரெனும்நகரத்தார்கள்
ஒட்டியபோதிகைமிட்டமைத்தார்புக
ழுசந்ததர்ம்மமடம்சமைத்தார் ௱௰

உசந்ததர்ம்மமிகுத்தோர்கள்செல்வ
மோங்கும்வசியகுலத்தார்கள்
இசைந்துவந்தவரைத்தேடியன்னம்
ஈவதுமுண்டோமணம்நாடி ௱௰௧

நாடியதர்ம்மமிகக்கொடுத்துகந்த
நாதன்கதிரேசன்வேலெடுத்து

ஆடித்திருவிழாநாளையிலேயிவ
ராண்டுக்கொருதரம்வாரதுண்டு ௱௰௨

வாறதுண்டுநகரத்தார்களென்று
மன்னவரேசொன்னீரின்னகரில்
ஆறுமுகன்கதிரேசனுக்குயிது
ஆடித்திருவிழாமுக்கியமோ ௱௰௩

முக்கியமாய்க்கதிர்காமத்திலேசுற்றி
முக்கோணசக்கரவீதியிலே
சக்கரபாணிமருகரெனுங்கந்த
சாமிதிருவிழாக்கூட்டமடி ௱௰௪

கூட்டமும்பாட்டமும்கொண்டாடுங்குடை
கொடிவிருதுகள்நின்றாடும்
நாட்டமுடையதிருநாளில்நிதம்
நடக்குகின்றவளமையென்ன ௱௰௫

வளமைவேழத்தின்மேல்மிகுந்துகந்தன்
மாணிக்கப்பேழைதனிலுகந்து
கலைதுளங்கியவீதியிலேவரும்
கந்தன்பவனியைப்பாருங்கடி ௱௰௬

கந்தனுக்கேர்த்ததிருநாளிலிந்தக்
காசினியோரும்வரும்நாளில்
செந்தமிழோர்களும்கொண்டாடக்கந்தன்
தேறுமேலேறுவதென்றைக்கையா ௱௰௭

தேருமேலேறும்வளமையில்லைச்சித்திர
தேருமிழுப்பதுமிங்கேயில்லை
நேருடன்தண்டிகைமீதேறிசுவாமி
நீராறுப்பானதைப்பாருங்கடி ௱௰௮

நீராறுப்பென்றதும்தோன்றிலையேயிப்போ
நீர்சொன்னபாஷைவிளங்கிலையே
தேருமின்னுட்டுவளமைகளேயிதைச்
சீருடனேசொல்லவேணுமையா ௱௰௯

சீருள்ளமாணிக்ககெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள்செய்யயிலே
நேருள்ளசிங்களப்பாஷையிலேயிதை
நீரறுப்பென்பதும்மெய்தாண்டி ௱௨௰

மெய்யானஆறுமுகவரெனும்சுவாமி
மேவியவள்ளிதெய்வானையெனும்
தையலர்மேவும்கதிர்காமம்தனை
தான்கண்டபேருக்குமுத்தியுண்டோ ௱௨௧

முத்தியுண்டுநினைத்தாலுமடிஅவ
முத்தர்புகழ்கதிர்காமம்வந்தால்
சித்தியுமுத்தியுமுண்டாகும்பிணி
சேராதருளவார்முருகேசன். ௱௨௨

கேசவன்தன்னருமைக்குரியவள்ளிக்
கிசைந்தகந்தன்புகழ்புரிய
வாசமிகுந்ததமிழதனைச்சொன்ன
மன்னவரேயுமக்கெந்தவூரு ௱௨௩

மன்னர்புகழ்ராமநாதபுரம்சேது
மானகராம்திருப்புல்லாணி
நன்னயமாகியஊர்தாண்டிதங்கம்
ராமசாமியெந்தன்பேர்தாண்டி ௱௨௪

பேரையும்ஊரையுமேபுகழ்ந்துசொன்ன
பேர்பெற்றமானகரமீதிருந்து
தாருலவுங்கதிர்காமத்துக்கேநீரும்
தானிங்கேவந்தவயணமென்ன ௱௨௫

வந்துகொழும்பதனில்ச்சிறந்துவெகு
வாசமதாய்ச்சிலநாளிருந்து
கந்தன்பவனியைக்கண்ணாலேகண்டு
கைதொழுதேத்தவும்வந்தேனடி. ௱௨௬

கைதொழுதேற்றியமெய்வாசன்நம்ம
கந்தன்கதிரைமுருகேசன்

தெய்வானைவள்ளிமணாளனுமேலினி
செந்தமிழால்துதிசொல்லுமையா ௱௨௭

சொல்லசொல்லச்சொல்லிக்கேட்டவர்க்குவரும்
துன்பமகற்றுமிப்பாடவர்க்கும்
தில்லையெல்லைவல்லத்தாண்டவத்தாள்வாலை
தேவிசிவகாமியின்தவத்தால் ௱௨௮

அருள்பொருந்தியபூவரசன்வள்ளி
யம்மைதெய்வானைக்கதிரேசன்
திருவிழாவிற்சிறந்தவராம்கந்தன்
தீர்த்தங்கொடுத்தருள்தந்தவராம் ௱௨௯

தீராதநோய்களைதீர்த்தவண்டி சுவாமி
சித்தம்வைத்துநம்மைக்காத்தவண்டி
நாரணனுக்குமருகனிவன்ஜெக
நாதன்செந்தூருமுருகனிவன். ௱௩௰

தேவசேனாதிபதிதாண்டிகூவும்
சித்திரச்சேவல்க்கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன்சன்னதியில்நின்று
முழங்கிக்கும்மியடியுங்கடி. ௱௩௧

சிம்மாசனத்திலிருந்தவரைவளம்
சேர்கதிர்காமமுகந்தவரை
யிம்மாணிலத்தவர்போற்றியே அவ
ரெண்ணிவந்தபடிநேத்திய ௱௩௨.

செலுத்தும்வேடிக்கைபாருங்கடி கந்தன்
தீபதெரிசனம்பாருங்கடி
தலத்தில்முக்கியம்மெத்தவடிகந்த
சாமிக்குசிங்காரம்நித்தமடி. ௱௩௩

முப்பத்துமுக்கோடிதேவருக்கும்நல்ல
மூவருக்கும்புவியாவருக்கும்
நாற்பத்தெண்ணாயிரம்தானவர்க்கும்தரு
நாவலர்க்கும்திசைகாவலர்க்கும் ௱௩௪

சிங்காரக்கும்மிதமிழ்சிறக்கும்நல்ல
செங்கைவேலன்கதிரேசனுக்கும்
மங்கையர்வள்ளிதெய்வாணையர்க்கும்ஜெய
மங்களம்வாழிமிகவாழி ௱௩௫

சித்திரவேலாயுதம்வாழிகந்தன்
சேவல்மயிலுமிகவாழி
சத்தியருள்கந்தன்சன்னதியில்புகழ்
சாமிபிடும்பனும்வாழியதாம். ௱௩௬

கதிர்காமக்கும்மி.

முற்றிற்று.

உ

சிவமயம்.

மங்களம்.

ஆதியாம்பரஞ் சோதிக்கும் அபிராமிக்கும்
ஜெயமங்களம்
மாதுவள்ளிதெய்வானைக்கும் வடிவேலர்க்கும்
சுபமங்களம்
திருவுக்குந்திருமாலுக்கும் தெய்வதேவர்க்கும்
ஜெயமங்களம்
குருவுக்குங்குமரேசர்க்கும் குறமாதுக்கும்
சுபமங்களம்
மாலருள்பிர்மதேவருக்கும் கலைமாதுக்கும்
ஜெயமங்களம்
அலைசூழ்கதிர்காமம்வாழி முருகையர்க்கும்
சுபமங்களம்
செந்தமிழ்க்கவியாளருக்கும் புவியாளருக்கும்
ஜெயமங்களம்
கந்தனாறுமுகவன்வேல் முருகையர்க்கும்
சுபமங்களம்

மங்களம்-முற்றிற்று.

உ [illegible]

[illegible]

[illegible]